

தமிழ்நாடு மின்கழக தொ.மு.ச.வின் 82 வது மாநில செயற்குழுக் கூட்டம் அதன் மாநில பொதுச்செயலாளர் பா.மணிமாறன் முன்னிலையில் மாநிலத் தலைவர் கே.சசிகுமார் தலைமையில் நடைபெற்றது. பேரவை பொதுச்செயலாளர் மு.சண்முகம்,பேரவைத் தலைவர் கி.நடராஜன்,பொருளாளர் கோ.சி.வள்ளுவன்,இணைப்பொதுச் செயலாளர் விஜயகுமார், பேரவை செயலாளர் தனசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# தமிழ்நாடு மின் கழக தொ.மு.ச. 82வது மாநில செயற்குழுக் கூட்டம்!

## பா.மணிமாறன் முன்னிலை தொ.மு.ச.பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் சிறப்புரை!

சென்னை, நவ. 26. தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் 82வது மாநில செயற்குழுக் கூட்டம் 22.11.2025 அன்று சென்னை எழும்பூரில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சங்க மாநிலத் தலைவர் கே.சசிகுமார், தலைமை தாங்கினார். மாநில பொதுச் செயலாளர் பா.மணிமாறன் முன்னிலை வகித்தார்.

அகில இந்திய தொ.மு.ச. பேரவை பொதுச்செயலாளர் மு.சண்முகம் அவர்கள், பேரவைத் தலைவர் கி.நடராசன் அவர்கள், பேரவை பொருளாளர் கோ.சி.வள்ளுவன் அவர்கள், பேரவை இணை பொதுச் செயலாளர் விஜயகுமார் மற்றும் பேரவைச் செயலாளர் தனசேகரன் ஆகியோர் கலந்து கொண்டு செயற்குழு கூட்டத்தில் சிறப்புரை யாற்றினார்கள்.

இச்செயற்குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. தமிழ்நாடு சட்ட மன்ற தேர்தலில் 2026ல் 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற்று தி.மு.கழகம் 7வது முறையாக ஆட்சி அரியணையில் அமர /கழகத்தலைவர் அன்புத்தளபதி அவர்களை 2வது முறையாக மக்கள் பணியாற்ற தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பு ஏற்க தமிழ்நாடு மின்கழகத் தொமுசவினர் கடுமையாக களப்பணியாற்றிட வேண்டும்.

2. தமிழ்நாடு பல துறைகளில் முன்னேற்றம் பெற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு துணையாக இருந்து அயராது பாடுபடும் சின்னவர் அவர்களை இச்செயற்குழு பாராட்டுகிறது.

3. தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களும் மற்றும் அனைத்து கட்சித் தலைவர்களின் வேண்டுகோளை ஏற்று SIR பணிகளை தமிழ்நாடு சட்ட மன்றத் தேர்தல் முடிந்த பிறகு கால அவகாசம் வழங்கி, படிவம் நிரப்பும் வழிமுறையை எளிமைப்படுத்தி பின்னர் SIR பணிகளை தொடர வேண்டும் என தேர்தல் ஆணையத்தை மாநில செயற்குழு கூட்டம் ஒரு மனதாக கேட்டுக்கொள்கிறது.

4. 2021, 2022, 2023 மற்றும் 2024ம் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட வரவு, செலவு கணக்குகளுக்கு இச்செயற்குழு ஒப்புதல் வழங்கியது.

5. தமிழ்நாடு மின்கழகத் தொ.மு.ச.வின் 22வது மாநில பொதுக்குழு 2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறும் என இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

6.கேங்மேன் தொழிலாளர்களுக்கு பதவி உயர்வு, விடுபட்ட கேங்மேன்களுக்கு பணி நிரந்தரம் மற்றும் மின்வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளம் சுண்டு பணி நிரந்தரம் செய்ய தீர்மானம்.

7. கொரோனா பெருந்தொற்று முதலாம் மற்றும் இரண்டாம் அலையிலும், பேரிடர் காலங்களிலும் புயல், கடும் மழையிலும் தமிழ்நாடு மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கிய மின்வாரிய தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு 01.12.2023 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வினை வழங்க வேண்டும் என இச்செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்கண்ட தீர்மானங்கள் உட்பட 23 தீர்மானங்கள் இச்செயற்குழுவில் நிறைவேற்றப்பட்டது.

இச்செயற்குழுவில் மாநில பொருளாளர் தே. மெய்ஞானமூர்த்தி, 2021 - 2022 -2023, மற்றும் 2024 ஆண்டிற்கான வரவு செலவு கணக்கு சமர்ப்பித்து ஒப்புதல் பெற்றார்.

மாநில பொதுச் செயலாளர் பா. மணிமாறன் ஏற்புரையாற்றினார்.

மாநிலத் துணைத் தலைவர்கள், துணைப் பொதுச் செயலாளர்கள், வட்டாரச் செயலாளர்கள், திட்டத் தலைவர்கள், திட்டச் செயலாளர்கள், மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் என 122 பேர்கள் மற்றும் 42 பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் நிறைவாக மாநில முதன்மைச் செயலாளர் தே.முரளிகுமார், நன்றியுரையாற்றினார் விழா இனிதே நிறைவு பெற்றது.



கழக மகளிர் அணி முன்னாள் செயலாளர் இராஜம் ஜான் வயது (69) அவர்கள் நெல்லை மாவட்டம் விக்கிரமசிங்கபுரத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் நேற்று முன்தினம் (24.11.2025) திங்கட்கிழமை அன்று உடல் நலக்குறைவு காரணமாக இயற்கை எய்தினார்.அன்னாரது இல்லத்திற்கு கழக துணை பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்றக் குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் சென்று மறைந்த ராஜம் ஜான் அவர்கள் உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.உடன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன், நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### இளைஞர் எழுச்சி நாள்: கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும்,

# மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழகங்கள் தோறும் நலத்திட்ட உதவிகள், உணவு வழங்கல்!

## மாவட்ட செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



வருகின்ற (27.11.2025 வியாழக்கிழமை) அன்று இளைஞர் எழுச்சி நாள் முன்னிட்டு கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைக்கழகங்கள் தோறும் நலத்திட்ட உதவிகள், உணவு வழங்கல், மரக்கன்றுகள் நடுதல், பள்ளி மாணவர்களுக்கு பள்ளி உபகரணங்கள் வழங்குதல், இரத்த தானம், மருத்துவ முகாம் நடத்துதல், விளையாட்டு போட்டிகள் நடுத்தி மற்றும் பொதுமக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும்.


அதுசமயம், இந்நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற,சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், முன்னாள் ஒன்றிய குழுத்தலைவர்கள், முன்னாள் மாவட்ட ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மாநகர மேயர், நகர மன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாநகர, நகர, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, வர்ததகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சுற்றுச்சூழல் அணி, அமைப்பு சாரா தொழிலாளர் அணி,, அயலக அணி, தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்,**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

### இரா.இரத்தினகிரி மறைவு: சென்னை அண்ணா அறிவாலயத்தில்

# “கலைஞர் கருவூலம்” காட்சியகத்தை அமைத்து முத்தமிழறிஞர் கலைஞரின் பாராட்டைப் பெற்றவர் இரா.இரத்தினகிரி!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, நவ.26- தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர் சங்கத்தின் முன்னாள் தலைவரும் திராவிட இயக்கத்தின் தீவிரப் பற்றாளருமான இரா.இரத்தினகிரி அவர்களின் மறைவுச் செய்தியறிந்ததும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், “தி.மு.க. தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் திராவிட இயக்க வரலாற்றை விவரிக்கும் “கலைஞர் கருவூலம்” காட்சியகத்தை அமைத்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பாராட்டைப் பெற்றவர்” என்று குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

**தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர் சங்கத்தின் முன்னாள் தலைவரும், திராவிட இயக்கத்தின் தீவிரப் பற்றாளருமான இரா.இரத்தினகிரி அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.**

**தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர் சங்கத்தின் தலைவராகச் சுமார் 20 ஆண்டுகாலம் பணியாற்றிய திரு. இரத்தினகிரி அவர்கள், பதினோராவது ஐந்தாண்டுத் திட்டக் குழுவின் உறுப்பினர், பால்வளத்துறை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சித் துறைகளின் ஆலோசகராகவும் இருந்துள்ளார். மகாராஷ்டிரா மாநிலம் புனேவில் உள்ள அகில இந்திய கால்நடை மருத்துவ அலுவலர்கள் சங்கத்தின் செயலாளராகவும் 18 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.**

**இவை மட்டுமின்றி, தி.மு.க. தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் திராவிட இயக்க வரலாற்றை விவரிக்கும் ”கலைஞர் கருவூலம்” காட்சியகத்தை அமைத்து, முத்தமிழறிஞர் கலைஞரின் பாராட்டைப் பெற்றவர். 1976 முதல் இன்றளவும் திராவிடர் கழகம் வெளியிட்டு வரும் பெரியார் நாட்குறிப்பையும் இரத்தினகிரி அவர்கள் வெளியிட்டுள்ளார். ‘பெரியார் இயக்கம்’ மாத இதழின் ஆசிரியராகவும் இருந்துள்ளார்.**

**உடல்நலம் குன்றி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இரத்தினகிரி அவர்களை, அண்மையில் நான் தஞ்சை சென்றிருந்தபோது நலம் விசாரித்ததை நினைவு கூர்கிறேன்.**

**ஈடுபட்ட அத்தனை பணிகளிலும் முழுமையான ஆர்வத்தையும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்திச் செயல்பட்ட இரத்தினகிரி அவர்களை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தார், நண்பர்கள், திராவிட இயக்கப் பற்றாளர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்நாட்டில் சென்னை மற்றும் மதுரையில் நடைபெற உள்ள ஹாக்கி ஆடவர் ஜூனியர் உலகக்கோப்பை 2025 போட்டிக்கான கோப்பையை வி.ஐ.டி.பல்கலைகழகத்தில் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி அறிமுகப்படுத்தினார். உடன்மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, மாமன்ற உறுப்பினர்கள் கா.சு. சண்முகம், விமலா சீனிவாசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




திருப்பத்தூர் மாவட்டம் மாதனூர் ஒன்றியம் தோத்தாலும் ஊராட்சி தேவிகாபுரம் கிராமம் அனைத்து கிராமங்கள் அண்ணா மறுமலர்ச்சி திட்டம் (2025–2026) திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடை கட்டிடத்தை ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினரும் மாதனூர் மேற்கு ஒன்றியச் செயலாளருமான அ.செ.வில்வநாதன் திறந்து வைத்தார். உடன் ஒன்றிய துணை பெருந்தலைவர் சாந்தி சீனிவாசன், ஒன்றியச் செயலாளர் ராமமூர்த்தி ஊராட்சி மன்றத் தலைவர் ரமேஷ், மாவட்டக் குழு உறுப்பினர் சசிகலா, சாந்தகுமார், ஒன்றியக் குழு உறுப்பினர் பரிமளா, கார்த்திக் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### குருவிகுளம் மேற்கு ஒன்றியச் செயலாளர்

# சேர்மத்துரை தந்தை டி.கே.செல்லையா மறைவு!

## ஈ.ராஜா எம்.எல்.ஏ. – கழகத்தினர் அஞ்சலி!




தென்காசி, நவ. 26 - தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி குருவிகுளம் மேற்கு ஒன்றியச் செயலாளர் சேர்மத்துரையின் தந்தை டி.கே.செல்லையா அவர்கள் (தமிழ்நாடு மின்சார வாரியம்) நேற்று முன்தினம் (24 .11.2025)உடல் நலக்குறைவு காரணமாக அவரது இல்லத்தில் வைத்து இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இது பற்றிய தகவல் அறிந்ததும் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அன்னாரது இல்லத்திற்கு சென்று மறைந்த செல்லையா அவர்களின் உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். மேலும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சங்கராபுரம் அ.ஆசிம்
### நவம்பர் 26 (2019)



**இளம் வயதிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் பேரூர்ச் செயலாளராகவும், ஒன்றிய அவைத்தலைவராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**1966, 86 ஆகிய இரண்டு முறை சங்கராபுரம் பேரூராட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**